# அழைப்பாளனின் அணிகலன்கள்


அரபு மூலம் :

அஷ்ஷெய்க் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன்

தமிழ் வடிவம் :

எஸ்.எச்.எம். இஸ்மாயீல் ஸலபி B.A. (Hons)


Tamili


المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بسلطانة

تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

هاتف : ٤٢٤٠٠٧٧ ناسوخ : ٤٢٥١٠٠٥ ص ب ٩٢٦٧٥ الرياض ١١٦٦٣ بريد إلكتروني E.mail : Sultanah22@hotmail.com

THE COOPERATIVE OFFICE FOR CALL & FOREIGNERS GUIDANCE AT SULTANAH

Tel:4240077 Fax:4251005 P.O.Box:92675 Riyadh:11663 K.S.A. E-mail: sultanah22@hotmail.com

# அழைப்பாளனின் அணிகலன்கள்

அரபு மூலம் :

அஷ்ஷெய்க் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன்

தமிழ் வடிவம் :

எஸ்.எச்.எம். இஸ்மாயீல் ஸலபி B.A. (Hons)
(விரிவுரையாளர் - தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்)

# நூல் விபரத் தொகுப்பு


மூலம் : ஸாதுத் தாஇய்யா இலல்லாஹ்

தமிழில் : அழைப்பாளனின் அணிகலன்கள்

மூலநூலாசிரியர் : அஷ்ஷைய்க் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன்

மொழிபெயர்ப்பாளர் : எஸ்.எச்.எம். இஸ்மாயீல் ஸலபி

பிரதிகள் : 5000

முதல் பதிப்பு : 16-06-2000

ஒளி அச்சு : தாருத் தவ்ஹீத் கம்பியூட்டர் மையம், பறகஹதெனிய, வேஉட.

வெளியீடுவோர்:

ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா,

தலைமையகம்,

பறகஹதெனிய,

வேஉட,

ஸ்ரீலங்கா.

(இலவச வெளியீடு)

# பதிப்புரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்.

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் சத்திய மார்க்கத்தைத் தெளிவாக மக்களுக்கு எடுத்து வைத்த இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும், அவர் காட்டிய நெறியை தம் வாழ்வில் கடைப்பிடித்து பிறருக்கும் எடுத்துக் கூறிய அனைத்து தாஈகள் மீதும் என்றென்றும் உண்டாவதாக!

இஸ்லாமிய அழைப்புப்பணி என்பது இந்த உம்மத்தின் சிறப்பம்சங்களுள் ஒன்றாகும். அதே வேளை நபி(ஸல்) அவர்கள் இறுதித்தூதர் என்பதால் இப்பணியைத் தொய்வின்றித் தொடரும் பொறுப்பும் இச்சமூகத்தின் மீது சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பொறுப்பை உணர்ந்த நன்மக்கள் பலரும் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். காலத்தின் தேவையை உணர்ந்து இப்பணியை பல அமைப்புக்களும் ஆற்றி வருகின்றன. இப்பணி அதன் உண்மையான பயனையடைய வேண்டுமெனின் அழைப்பாளர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை இப்பணியில் ஈடுபடுவோர் அறிந்திருத்தல் அவசியமாகும்.

இதனை மனதில் கொண்டு அஷ்ஷெய்க்

முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் அவர்களின் "ஸாதுத் தாஇயா இலல்லாஹ்" என்ற உரையை எமது பணியகத்தில் பணிபுரியும் மௌலவி. S.H.M. இஸ்மாயில்(ஸலபி) அவர்கள் மூலம் மொழியாக்கம் செய்து வெளியிடுகின்றோம்.

இவ்வெளியீடு எமது த∴வா அணுகுமுறை பற்றி தவறாக புரிந்துள்ள பலருக்கும் ஒரு தெளிவைக் கொடுக்கும் என நம்புகின்றோம். இப்பணியில் ஈடுபடும் அனைவருடனும், குர்ஆன் சுன்னாவுக்கு முரண்படாத அதே வேளை புரிந்துணர்வுடனும், சமரச சகிப்புணர்வுடனும், காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து கைகோர்த்துச் செல்ல நாம் தயாராகவுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

இந்நூல் அழைப்பாளர்களிடம் காணப்படவேண்டிய அழகிய குணங்கள் பற்றித் தெளிவு படுத்துகின்றது. இது நம்மனைவருக்கும் நல்லதொரு வழிகாட்டலாக அமையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இஹ்லாஸான எண்ணத்துடன் தூய இஸ்லாத்தின் தூதை எத்திவைக்கும் நல்ல தாஈகளாக எம்மை ஆக்கி அருள்வானாக!

*இவண்,*

**N.P.M. அபூபக்கர் சித்தீக் மதனி,**

பொதுத்தலைவர்,
ஜம்இய்யது அன்சாரிஸ்
சுன்னதில் முஹம்மதிய்யா,
பறகஹதெனிய, வேஉட.

# முன்னுரை

எல்லாப்புகழும் எத்துதியும் வல்லோன் அல்லாஹ் ஒருவனுக்கே! அவனது திருத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் காட்டிய தீன் நெறிப்பிரகாரம் வாழ்ந்த வாழும் அனைவர் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஒன்றே! இந்த இஸ்லாமிய நெறியை மக்கள் இதயங்களில் ஏற்றும் பணியை நபிமார்கள் செய்து வந்தனர். இப்பணி இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வருகையுடன் முற்றுப் பெற்றுவிட்டது. எனினும் இஸ்லாமிய ஜீவஜோதியை மக்கள் இதயங்களில் ஏற்றும் நபித்துவப் பணி முற்றுப்பெறவில்லை. அது அனைத்து முஸ்லிம்களின் கடமையாகத் திகழ்கின்றது.

இந்தப் புனித பணியை நிறைவேற்றக் களம் இறங்கும் ஒரு முஸ்லிம் தனது பண்புகளையும் நபித்துவ வழியில் அமைத்துக்கொள்வது அழைப்புப் பணியை வெற்றிகரமாகக் கொண்டு செல்லும் வழியாகும். காடைத்தனத்துடனும் கரடுமுரடான போக்குடனும் இப்புனித பணியை நிறைவு செய்ய முடியாது.

இவ்வகையில் தற்கால அறிஞர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் ஸாலிஹ் அல் உஸைமீன் அவர்கள்

“சாதுத் தாஇயா இலல்லாஹ்” எனும் தலைப்பில் ஜித்தாவிலுள்ள ஜாமிஅதுல் மலிக் அப்துல் அஸீஸ் பல்கலைக்கழகத்தில் ஓர் அருமையான உரையை ஆற்றினார். அதனை பஹ்த் இப்னு நாஸிர் இப்னு இப்றாஹீம் அஸ்ஸுலைமான் அவர்கள் நூல் வடிவமாக்கினார்கள். இந்நூலைக் கண்ணுற்ற ஜம்இய்யாவின் செயலாளர் A.L. கலீலுர்ரஹ்மான் M.A. அவர்கள் 16,17-06-2000ல் பறகஹதெனியாவில் நடைபெறவுள்ள தஃவா கருத்தரங்கில் வெளியிடுவதற்காக அதனை தமிழாக்கம் செய்யுமாறு வேண்டியதன் விளைவாக இதனைத் தமிழ்ப்படுத்தினேன்.

அஷ்ஷெய்க் ஸாலிஹ் அல் உஸைமீன் அவர்களுக்கும், பஹ்த் இப்னு நாஸிர் அவர்களுக்கும் அல்லாஹ்விடம் துஆக் கேட்கும் அதேவேளை ஜம்இய்யாவின் பொதுத் தலைவர் அஷ்ஷெய்க் முஹம்மத் அபூபக்கர் சித்தீக் மதனி அவர்களுக்கும், ஜம்இய்யாவின் செயலாளர் அவர்களுக்கும், ஒத்துழைப்புக்கள் நல்கிய நண்பர் M.L. முபாரக்(ஸலபி) அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உண்மையான இஸ்லாமிய அழைப்பாளர்களாக எம் அனைவரையும் அல்லாஹ் ஆக்கி அருள்புரிவானாக!

இவண்,
S.H.M. இஸ்மாயீல் ஸலபி

59/B கலதெனிய,
உடதளவின்ன மடிகே,
கடுகஸ்தொட.

# பீடிகை

புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே! அவனைப் புகழ்ந்து, அவனிடம் உதவி கோரி அவனிடம் பாவமன்னிப்புக் கேட்டு அவன்பாலே மீளுகின்றோம். எமது உள்ளங்களினதும், செயல்களினதும் தீங்குகளைவிட்டும் அவனிடம் பாதுகாவல் தேடுகின்றோம். அவன் நேர்வழிகாட்டியவரை வழிகெடுப்பவரோ, அவன் வழிகெடவிட்டவனை நேர்வழிப்படுத்துபவரோ எவரும் இல்லை. அல்லாஹ் ஒருவனென்றும் அவனுக்கு இணை, துணை இல்லையென்றும் சாட்சி கூறுகின்றேன்.

முஹம்மத்(ஸல்) அவர்கள் அவனது அடியாரும் திருத்தூதருமாவார் என்றும் சாட்சி கூறுகின்றேன். அவரை அல்லாஹ் நேர்வழியையும் சத்தியமார்க்கத்தையும் கொடுத்து அனைத்து மதங்களைவிடவும் இம்மார்க்கத்தை மேலோங்கச் செய்ய அனுப்பினான். அவர் தனது தூதுத்துவத்தை எத்திவைத்து தன் அமானிதத்தைப் பேணினார். சமூகத்தை சீர்திருத்தி அல்லாஹ்வின் வழியில் அறப்போர் புரிந்தார். இதன்மூலம் அழிந்து போனவனைத் தவிர வேறு யாரும் தடம்புரளாத அளவிற்கு இரவும், பகலைப் போன்ற மிகத் தெளிவான நிலையில் தன் சமூகத்தை விட்டுச் சென்றார்.

அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் அந்தத் தூதர் மீதும், அவர் குடும்பத்தினர், தோழர்கள் இறுதி நாள்வரை இவர்களை அழகிய முறையில் அடியொட்டி வாழும் நல்லடியார்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

எல்லாம் வல்ல அல்லாஹ் என்னையும் உங்களையும் இரகசியத்திலும் பரகசியத்திலும் அவரைப் பின்பற்றுவோராக ஆக்கியருள்வானாக! எம்மை அவரது தீனைப் பின்பற்றியோராக மரணிக்கச் செய்து அவரது கூட்டத்தோடு மறுமையில் எழுப்பி அவரது ஷபாஅத்தையும் அருளி, உயர் தரமான சுவனத்தில் அவருடனும் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற (ஏனைய) நபிமார்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்கள் ஆகியோருடன் எம்மை ஒன்று சேர்த்து வைப்பானாக!

*இஸ்லாமிய சகோதரர்களே! நலவை நாடும், சத்தியமான இச்சன்மார்க்கம் தரணியெங்கும் பரவ வேண்டும் என்று பாடு படும் நல்ல உள்ளங்களே! உங்களுக்கு "அழைப்பாளனின் அணிகலன்கள்" எனும் கருப்பொருளில் சில கருத்துக்களை முன்வைப்பதில் நான் மகிழ்வுறுகிறேன்.*

# அறிவும் உறுதி மொழியும்

அல்லாஹுத்தஆலா எவர்களுக்கெல்லாம் அறிவெனும் பொக்கிஷத்தை வழங்கினானோ அவர்களிட மெல்லாம் மிகப்பெரும் உறுதிமொழியொன்றைப் பெற்றிருக்கின்றான். அந்த உறுதிமொழிதான் அறிவை மறைக்காது அதை மக்களுக்குத் தெளிவு படுத்தி விட வேண்டும் என்பதாகும்.

இதனைப் பின்வரும் திருமறை வசனத்தில் அல்லாஹுத்தஆலா தெளிவாகக் கூறுகின்றான்.

"வேத(ஞான)ம் கொடுக்கப்பட்டவர்களிடம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேத(ஞான)த்தை மறைத்து விடாது மக்களுக்கு நீங்கள் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்" என்று அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை (நபியே!) நீர் அவர்களுக்கு நினைவு படுத்துவீராக. (3:187)

இந்த உறுதிமொழி என்பது எழுதி மனிதர்களின் பார்வைக்காக வைக்கும் உடன்படிக்கையல்ல. அறிவை யுடையோர் அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய அல்குர்ஆனில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட உடன் படிக்கையே இதுவாகும். இந்த உடன்படிக்கை அல்லாஹ் வுக்கும் அறிவைப்பெற்ற ஆண் அல்லது பெண்ணுக்கு மிடையில் நடைபெற்ற உடன்படிக்கையாகும்.

எனவே, அறிவைப் பெற்றவர் எங்கிருந்தபோதும், எச்சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வின் ஷரீஅத்தில் அவர் அறிந்ததை மக்க ளுக்கு எத்திவைப்பது அவசியமாகும்.

# தக்வா

அழைப்புப்பணி எனும் நீண்ட நெடிய பாதையில் பயணிக்கத்தயாராகும் ஒரு தாஈ எனும் பிரயாணி தன் பயணத்திற்காக என்ன ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும் என்பதை நாம் அறிதல் அவசியமாகும்.

"(பிரயாணத்திற்கு வேண்டியவற்றைத்) தயார் செய்து கொள்ளுங்கள். நிச்சயமாக தயார் செய்து வைப்பதில் மிகச் சிறந்தது (தக்வா எனும்) பயபக்தியே யாகும்..." (2:197)

தக்வா என்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் அணிகலனாக இருத்தல் வேண்டும் என்பதை மேற்படி வசனத்தின் மூலம் உணரலாம். தக்வாவை ஏவி, அதனுயுடையோரைப் புகழ்ந்து அதன் மூலம் கிடைக்கும் 'தவாப்' எனும் நற்கூலி பற்றி விபரித்து திருமறைக் குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் கூறியுள்ளான். பின்வரும் வசனங்கள் இது பற்றி மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

உங்கள் இரட்சகனின் மன்னிப்பின்பாலும் வானம் பூமி(யளவு) அகலத்தையுடைய சுவனத்தின் பாலும் விரைந்து கொள்ளுங்கள். அது பயபக்தி உடையவர்க ளுக்காக(வே) தயார் செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் எத்தகையோரென்றால் செல்வநிலையிலும், வறுமை நிலையிலும் செலவு செய்துகொண்டிருப்பார்கள்; கோபத்தை அடக்கிக்கொள்ளக் கூடியவர்கள்; மனிதர்(களின் குற்றங்)களை மன்னித்துவிடக் கூடியவர்கள்; அல்லாஹ்வோ (இத்தகைய) நன்மை செய்வோரை நேசிக்கின்றான்.

இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால் யாதொரு மானக்கேடான காரியத்தை அவர்கள் செய்துவிட்டால் அல்லது (ஏதும் பாவமிழைத்துத்) தங்களுக்குத் தாங்களே அநீதமிழைத்துக் கொண்டால் (உடனே) அல்லாஹ்வை நினைவு கூர்வார்கள். இன்னும் (அவனிடமே) தங்களுடைய பாவங்களுக்காக மன்னிக்கத் தேடுவார்கள். (அல்லாஹ் அவர்களை மன்னித்து விடுவான்) அல்லாஹ்வைத் தவிர (இத்தகையவர்களது) குற்றங்களை மன்னிப்பவன் யார்? அவர்கள் செய்த (தவறான) காரியத்தை (த் தவறென்று) அவர்கள் அறிந்து கொண்டே (அதில்) நிலைத்திருக்கவுமாட்டார்கள். உடனே அதிலிருந்து விலகி விடுவார்கள்.

இத்தகையோருடைய கூலி அவர்களுடைய இரட்சகனின் மன்னிப்பும் சுவனபதியுமாகும். இவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். இவர்கள் அதில் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பார்கள். இத்தகைய காரியங்கள் செய்தோரின் கூலி மிக நல்லது.

(03: 133-136)

## தக்வா என்றால் என்ன?

தக்வா என்றால் என்ன என்றொரு ஐயம் பலருக்கும் எழலாம். இதனை தல்க் இப்னு ஹபீப் (ரஹ்) அவர்கள் விபரிக்கையில் "அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்து, அவனது ஒளியின் அடிப்படையில் அவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதாகும்" எனக் கூறுகின்றார்கள்.

இங்கே அறிவும் அமலும் ஒன்று சேர்க்கப்படுகின்றது. ஷரீஅத்தை அறிந்து அதன்படி அமல் செய்யவேண்டும். அறிவோடு அமல் செய்யும் அதே வேளை அதன் மூலம் அல்லாஹ்வின் அருளையும் நாடி அவனது தண்டனையை அஞ்சவும் வேண்டும். இதுவே தக்வாவாகும்.

அழைப்புப் பணியில் ஈடுபடும் ஒருவர் இந்த அடிப்படையில் தனது தனிப்பட்ட, பகிரங்க நடவடிக்கைகள் அனைத்திலும் தக்வா எனும் இவ்வுயர் பண்பை அணிகலனாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இங்கே ஒரு அழைப்பாளன் தன் அணிகலனாகக் கொள்ள வேண்டிய இன்னும் பல அம்சங்களை உங்கள் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

**01. அழைக்கும் விடயத்தில் அறிவைப் பெற்றிருத்தல்**

தான் அழைக்கும் கருப்பொருள் பற்றிய குர்ஆன் சுன்னாவின் அறிவை அழைப்பாளன் பெற்றிருக்க

வேண்டும். குர்ஆன் சுன்னாவில் இல்லாத ஏனைய பொதுவான விடயங்கள் குர்ஆன் சுன்னா எனும் உரை கற்களில் உரசிப்பார்க்கப்படவேண்டும். ஈற்றில் அவை இவை இரண்டிற்கும் உடன்பாடானதாகவோ, முரண்பாடானதாகவோ இருக்கக் காணலாம். உடன்பாடானதாயின் ஏற்கப்படும். முரண்பாடானதாயின் அதைக் கூறியவர் யார் எனினும் மறுப்பது கடமையாகும்.

இதனை இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களின் பின்வரும் கூற்று மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

"உங்கள் மீது வானத்திலிருந்து கல்மாரி பொழியப் படுமோ என நான் அஞ்சுகிறேன். ஏனெனில் நான் அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள் என்கிறேன். நீங்கள் அபூபக்கர் கூறினார் உமர் கூறினார் என்கிறீர்களே!"

அறிவிலும், இறையச்சத்திலும் உயர்வு பெற்ற நபியின் நேசத்தையும் நெருக்கத்தையும் பெற்ற இவர்களது கூற்றே நபியின் கூற்றுக்கு முரண்படும்போது ஏற்கமுடியாது எனும் போது ஏனையோரது கூற்றுக்களின் நிலை என்ன? அவை கட்டாயம் மறுக்கப்பட வேண்டியவை என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமிருக்க முடியுமா?

*இதோ அல்லாஹ்வின் எச்சரிக்கையைப் பாருங்கள்!*

"(நம் தூதராகிய) இவருடைய கட்டளைக்கு மாறு செய்பவர்கள் தங்களை பித்னா பிடித்துக்கொள் வதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்து விடுவதையோ பயந்து கொள்ளட்டும்." (24:63)

அல்லாஹ்வின் தூதருக்கு மாறுசெய்வோரை "பித்னா பிடித்துக்கொள்ளும்" என்பது பற்றி விளக்கப்புகுந்த இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள்.

"பித்னா என இங்கே கூறப்பட்டது எதை என்பதை அறிவீர்களா? பித்னா என்பது ஷிர்க்கைக் குறிக்கும். நபி மொழிகள் சிலவற்றை மறுக்கும் போது உள்ளத்தில் குழப்பம் காலூன்றிவிடும் அதன் மூலம் இவன் அழிந்து போவான்" என கூறினார்கள்.

எனவே ஒரு அழைப்பாளன் முதலில் அல்குர்ஆன், ஸஹீஹான சுன்னா ஆகியவற்றின் அறிவைத் தன் அணிகலனாகக் கொள்ள வேண்டும். அறிவு இல்லாமல் அழைப்புப்பணியில் ஈடுபடுவது அறியாமையின் அடிப்படையில் அழைப்பதாகும். இதனால் நன்மை விளைவதற்குப் பகரமாக பெரும் தீமைகளே விளையும் அறிவைப் பெறாமல் மக்களுக்கு வழிகாட்ட முன்வருபவன் சில வேளை தானும் வழிகெட்டு பிறரையும் வழிகெடுத்து விடலாம். (அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்)

சிலவேளை அறியாமையுடன் ஆணவத்துடன் கூடிய பிடிவாதமும் இணைந்து கொண்டால் அதன் விபரீதம் மிகக்கொடியதாகும். வெறும் மடமை என்றால் அறிவுரை மூலம் அகற்றலாம். பிடிவாதத்துடன் கூடிய மடமையைப் பொறுத்தவரை கூறி அகற்ற முடியாது. இத்தகையவர்கள் தமது அறியாமையை அறிந்து மௌனம் சாதிப்பதும் இல்லை? அவர்கள் மடமையுடனேயே மக்களை

அழைத்து வருவர். இதனால் சமூகம் சீர் செய்யப்படுவதை விட அதிகமாக சிதைக்கப்பட்டு விடுகின்றது.

அறிவு இல்லாமல் அழைப்புப்பணியில் ஈடுபடுவது நபிவழிக்கும், முன்சென்ற நல்லடியார்களின் நடைமுறைக்கும் மாற்றமானதாகும் இதோ இந்த திருமறை வசனத்தை நன்றாக அவதானியுங்கள்.

(நபியே!) நீர் கூறுவீராக! இது என்னுடைய வழியாகும். அல்லாஹ்வின் பக்கம் நான் உங்களை அழைக்கிறேன். நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஆதாரத்தின் மீதே இருக்கிறோம். அல்லாஹ் மிகத் தூய்மையானவன். நான் அல்லாஹ்வுக்கு இணைவைப்பவர்களில் உள்ளவனல்லன். (12:108)

இங்கே நபியும் அவரைப்பின்பற்றியோரும் அல்லாஹ்வின் பாதையில் தெளிவான ஆதாரத்தைக் கொண்டு அழைப்பதாகக் கூறப்படுகின்றது. எனவே இஸ்லாமிய அழைப்புப்பணி என்பது தெளிவான ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டுமே தவிர அறியாமையின் அடிப்படையில் அமைந்திருக்கல் ஆகாது.

'அலா பஸீரத்தின்' என்ற பதத்தை ஆழமாக நாம் நோக்கின் பல முக்கிய அம்சங்களை அறிந்து கொள்ள முடியும்.

**A. அழைக்கும் விடயத்தில் தெளிவு:**

அழைப்பாளன் தான் அழைக்கும் விடயம் பற்றிய ஷரீஅத்தின் சட்டத்தை தெளிவூற அறிந்திருத்தல் அவசியமாகும் இல்லையெனில் விபரீதமான விளைவுகளே ஏற்படும். ஏனெனில் தெளிவற்ற ஒரு அழைப்பாளன் ஒரு செயலைக் கட்டாயம் எனக் கருதி மக்களுக்கு ஏவுவான். அது இஸ்லாமிய ஷரீஅத்தில் வலியுறுத்தப்படாத ஒன்றாக இருக்கும். இதனால் இவர் அல்லாஹ்வின் அடியார்கள் மீது அவன் விதிக்காததை விதித்து சிரமப் படுத்தி விடலாம்.

சில வேளை ஏதேனும் ஒன்றை இவர் ஹறாம் எனக் கூறலாம். ஆனால் அல்லாஹ்வின் ஷரீஅத்தில் அது ஹலாலாக இருக்கலாம். இதனால் இவர் அல்லாஹ் தன் அடியார்களுக்கு ஆகுமாக்கிவைத்ததைத் தடுத்தவராகிறார். இது எவ்வளவு விபரீதமானது என்பதையும், இதனால் அடியார்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் எண்ணிப்பாருங்கள்.

**B. அழைக்கப்படுவோர் நிலை பற்றிய தெளிவு:**

நாம் யாரை அழைக்கின்றோமோ அவர்கள் நிலை என்ன என்பதிலும் தெளிவு அவசியம். இதனை நபி(ஸல்) அவர்கள் முஆத்(ரழி) அவர்களை யமனுக்கு அனுப்பும்போது "(முஆதே) நீ வேதம் கொடுக்கப்பட்ட ஒரு சமூகத்தை சந்திக்கப்போகிறாய்...." எனக் கூறி அனுப்பியது தெளிவுபடுத்துகின்றது.

நாம் அழைக்கும் நபர் அல்லது சமுகத்தின் அறிவுத்தரம் என்ன? அவர்களது தர்க்கரீதியாக வாதிக்கும் தகுதி என்ன? என்பதைத் தெளிவாக அறிந்து அதற்கேற்றாற்போல் அவர்களுடன் உரையாடும் ஆற்றலுடனேயே அவர்களை அழைப்பாளன் அணுக வேண்டும்.

சிலவேளை தர்க்கரீதியாக வாதிக்கும் ஆற்றல் பெற்ற ஒருவரிடம் உரிய ஆயத்தமின்றி அழைப்பாளன் த.ஃ.வதிற்குச் சென்றால் அவன்தன் வாதத்திறமையால் உண்மையை ஊமைப்படுத்தலாம். அதற்கு தான் அழைக்கும் நபர் பற்றிய தெளிவு இல்லாமல் த.ஃ.வத்திற்குச் சென்ற அழைப்பாளன் காரணமாகி விடுகின்றான். இதனால் சத்தியத்தை வளர்க்க வேண்டியவனே அதை வெட்டிச் சாய்த்தவனாகின்றான் இது மோசமான விளைவல்லவா?

அசத்தியவாதியை பேச்சில் எப்போதும் மடக்கி விடமுடியும் என நாம் அசாதாரணமாக எடை போட்டுவிடக்கூடாது. நபி(ஸல்) அவர்களே! “நீங்கள் நீதி கேட்க என்னிடம் வரலாம்! நான் உங்களது வாதி பிரதிவாதியின் வாதங்களைப் பார்த்து தீர்ப்புக்கூறுவேன். உங்களில் சிலர் தங்கள் தரப்பு வாதங்களை எடுத்து வைப்பதில் ஆற்றல் பெற்றிருக்கலாம். நான் உங்களது வாதத்தைக் கேட்டு (தவறாகக்கூட) தீர்ப்பு வழங்கி விடலாம்” எனக் கூறிய நபிமொழி மூலம் வாதத்

திறமையால் மக்கள் கவனத்தை வெல்லலாம் என்பதை உணரலாம். எனவே அழைப்பாளன் தான் அழைக்கப்போகும் மக்கள் அல்லது தனிநபர் பற்றிய தெளிவைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

## அழைக்கும் விதம் பற்றிய தெளிவு

ஒரு அழைப்பாளன் எப்படி மக்களை அழைப்பது என்பதைப் பற்றிய தெளிவுடன் இருக்க வேண்டும்.

"நீர் விவேக(ஹிக்)த்தைக் கொண்டும், அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் (மக்களை) அழைப்பீராக! மேலும் மிக அழகிய முறையில் அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக..."

(16:125)

சிலர் தீமையைக் கண்டதும் எதிர்விளைவுகளைப் பற்றி சிறிதும் எண்ணிப்பார்க்காது அதனை திடீரென தடுக்கமுறற்படுகின்றனர். ஒரு அழைப்பாளன் செயல்படுவதற்கு முன்னர் அதன் எதிர் விளைவு என்ன என்பது பற்றி நிதானமாகச் சிந்தித்துப்பார்த்து அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்றாற்போல் செயல்படுவது சிலவேளை அப்போதைய அவனது ரோசத்தீயை வேண்டுமானால் அணைக்கலாம். ஆனால் சிலவேளை இச்செயல் வெகு விரைவிலேயே பிறரது ரோசத்தீயை கிளரி விடலாம். எனவே அழைப்புப்பணியில் ஈடுபடும்

எனது சகோதரர்களிடம் ஹிக்மத்தாகவும் நிதானமாகவும் இப்பணியில் ஈடுபடுமாறு நான் வேண்டிக் கொள்கின்றேன். அல்லாஹ்வின் அருளால் சற்று தாமதமானாலும் நல்லமுடிவை பெறலாம் என நம்புகின்றேன்.

குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் பெறப்பட்ட சரியான அறிவு என்பதே ஒரு அழைப்பாளனின் மிகச் சிறந்த அணிகலனாகும். ஷரீஅத்தின் போதனை மட்டுமல்ல சாதாரண தர்க்க ரீதியான சிந்தனையும் இதனையே வலியுறுத்தும். போகவேண்டிய இடம் எது எனத்தெரியாமல் எப்படி அழைக்கமுடியும். அல்லாஹ்வின் ஷரீஅத் பற்றிய தெளிவு இல்லாதவன் எப்படி அதன் பால் அழைப்பவனாக முடியும்.

## ஐயமும் தெளிவும்:

மனிதன் அறிவைப் பெற்றிராவிட்டால் முதலில் அவன் கற்க வேண்டும். அதன் பின்னரே அவன் அழைப்புப்பணியில் ஈடுபடவேண்டும். இவ்வாறு நாம் கூறும்போது "என்னைப் பற்றி ஒரு செய்தி உங்களுக்குக் கிட்டினாலும் எத்திவைத்து விடுங்கள்" என்ற நபிமொழிக்கு மாற்றமாகவுள்ளதே? ஒரு செய்தியை அறிந்தவன்கூட அழைப்புப்பணியில் ஈடுபடலாம் என்றல்லவா இந்நபிமொழி கூறுகின்றது? எனச் சிலர் வினவ முற்படலாம்.

இங்கே நபியவர்கள் "என்மூலம்" ஒரு செய்திதான் உங்களுக்குக் கிடைத்தாலும் எத்திவையுங்கள் என்றுதான்

கூறியுள்ளார்கள். இது எத்திவைத்தல் என்பது நபி மூலம் பெறப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

அழைப்பாளன் அறிவை அணிகலனாகக் கொண்டிருக்க வேண்டும் என நாம் கூறுவதன் அர்த்தம் அவன் அறிவுக்கடலின் ஆழத்தை அடைந்தவனாக இருக்க வேண்டும் என்பதல்ல. இந்த நபி மொழி கூறுவது போல் எதைச்சொல்கிறானோ அதை அறிந்திருத்தல் வேண்டும் என்பதையே நாம் கூறுகின்றோம். அழைப்பாளன் தான் அறியாததை மக்களுக்கு ஏவக்கூடாது என்பதே அடிப்படையாகும்.

**02. அழைப்புப் பணியில் பொறுமையைக் கைக்கொள்ளல்:**

அழைப்பாளன் பொறுமை எனும் பெறுமதியான அளப்பரிய அணிகலனை உடையவனாகத் திகழ வேண்டும்.

**A. அழைக்கும் விடயத்தில் பொறுமை:**

அழைப்பாளன் சடைவும் தளர்வுமின்றி தன் சக்திக்கேற்ப தனக்குக்கிடைக்கும் சாதனங்களைப் பயன்படுத்தி தன் பணியில் தொடராக ஈடுபடவேண்டும். சடைவு ஏற்பட்டால் தொட்ட பணியைக் கை விட்டு விடுவது மனித இயல்பாகும். ஆனால் இந்த மனித பலவீனத்தை அழைப்பாளன் வென்றிட வேண்டும். இப்பணியைத் தொய்வின்றி அவன் தொடர்வானெனின்

ஒரு புறம் பொறுமையாளர்கள் பட்டியலில் இடம் பிடித்துக்கொள்வான். மறுபுறம் நிச்சயம் இறுதி வெற்றியை ஈட்டிக் கொள்வான்.

இதனை ".....(நபியே! கஷ்டங்களைச் சகித்து) பொறுமையுடன் இருப்பீராக! நிச்சயமாக (நல்ல) முடிவு பயபக்தியுடையவர்களுக்காகும்." (11:49)

மேலே நாம் கூறியதை இத்திருமறை வசனம் உறுதிப்படுத்துவதை அறியலாம்.

**B. தஃவதில் குறுக்கிடும் சவால்களில் பொறுமை.**

அழைப்பாளன் தன் பணியில் குறுக்கிடும் சவால்களைப் பொறுமையுடன் சகித்தல் வேண்டும். ஏனெனில் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடும் எவருக்கும் சவால்களும் எதிர்ப்புக்களும் கிளர்ந்து வருவது தவிர்க்க முடியாததாகும். இதனை,

"இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும் குற்றவாளி களிலிருந்து பகைவரை நாம் ஆக்கினோம். நேர்வழி காட்டவும் உதவவும் (நபியே)உமக்கு உமது இரட்சகனே போதுமானவனாகும். (25:31) என்ற திருமறை வசனம் உணர்த்துகின்றது.

பிரச்சாரப்பணியென்பது ஒரு போர்க்களம் போன்ற தாகும். அங்கு எதிர்ப்புக்கள், தடைகள், எதிர்வாதங்கள்,

முட்டுக்கட்டைகள் என்பன அவசியம் இருந்தேயாகும். எனினும் அழைப்பாளன் இத்தடைகளைப் பொறுமையுடன் தாண்ட முயற்சிக்கவேண்டும்.

தன்னை விமர்சிப்போர் தனது அழைப்பு பாத்திலானது எனக் கண்டித்தாலும் தான் சத்தியத்தில இருப்பதை உணர்ந்த ஒரு அழைப்பாளன் சடைவடைய வேண்டியதில்லை. அவர்களின் கூற்றுக்களை அசட்டை செய்தவனாக பொறுமையுடன் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி நாம் கூறுவதன் அர்த்தம் ஒரு அழைப்பாளன் தன்னை எதிர்ப்பவர்கள் பக்கம் சத்தியம் இருப்பதை உணர்ந்ததன் பின்னரும் தனது கருத்தில் பிடிவாதமாக இருக்க வேண்டும் என்பதல்ல. அப்படிச் செய்வது "தமக்குத் தெளிவான பின்னரும் சத்தியத்தில் அவர்கள் உம்முடன் விவாதம் செய்கின்றனர்" (8:6) என்று அல்லாஹ் கூறிய "குப்பார்"களின் செயலுக்கு ஒப்பானதாக ஆகிவிடும். இப்பண்பை அல்குர்ஆன் பழித்துரைக்கின்றது.

இப்பண்பை உடையவர்கள் பற்றி " இன்னும் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும் எவர், (நம்முடைய) இத்தூதருக்கு மாறு செய்து, விசுவாசிகளின் வழியல்லாத (வேறுவழியான)தைப் பின்பற்றுகிறாரோ அவரை நாம் அவர் திரும்பிய

(தவறான) வழியிலேயே திருப்பி விடுவோம்; (பின்னர்) அவரை நரகத்தில் புகுத்தி விடுவோம்; அது செல்லுமிடங்களில் மிகக் கெட்டது." (4:115) என்று அல்குர்ஆன் எச்சரிக்கை செய்துள்ளது.

எனவே அழைப்பாளன் தன்னை நோக்கி வரும் எதிர் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எதிர்த் தரப்பிடம் நியாயமிருப்பின் தன் கருத்தைவிட்டு விட்டு நியாயத்தை ஏற்க வேண்டும். இல்லையெனில் எதிர்ப்புக்களைக் கண்டு தயங்கிடாது தன் பணியை உறுதியுடன் முன்னெடுத்துச் சென்றிடல் வேண்டும்.

**C. சோதனைகளைப் பொறுத்தல்:**

அழைப்பாளன் வசை மொழிகளுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்படலாம். அப்போது தஃவாக் களத்தில் அவன் எதிர் கொள்ளும் சோதனைகளைப் பொறுமையுடன் சகித்தல் வேண்டும். பிரச்சாரப்பணியில் இறைத்தூதர்கள் அனைவரும் இத்தகைய இன்னல்களை எதிர் கொண்டிருப்பதைக் காணலாம்.

"இவர்களுக்கு முன் வந்த எந்தத் தூதரையும் சூனியக்காரன் அல்லது பைத்தியக்காரன் என்று இவர்கள் கூறாது விட்டதில்லை." (51:52)

அல்லாஹ்விடமிருந்து வஹி எனும் மிகப் பெரும் பேற்றைப் பெற்ற இறைத்தூதர்களை நோக்கி

பைத்தியக்காரன், சூனியக்காரன் என்று கூறுவது அவர்களது உள்ளத்தை எவ்வளவு பாதித்திருக்கும் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்! இத்தகைய வேதனைகளை அத்தூதர்கள் சகித்துக் கொண்டே தமது சத்தியப் போராட்டக்களத்தில் உறுதியோடு முன்னேறினர்.

ரஸுல்மார்களில் முதலானவரான நூஹ்(அலை) அவர்கள், கப்பல் செய்யும்போது அவரைக் கடந்து சென்ற அவரது கூட்டத்தினர் கப்பல் கட்டும் நபியை எள்ளிநகையாடினர். "அவர் கப்பலைக் கட்டிக்கொண்டிருந்தபோது அவருடைய சமூகத்தின் தலைவர்கள் அவர் பக்கம் செல்லும் போதெல்லாம் அவரைப் பரிகசித்தனர். (அதற்கு) அவர்: "நீங்கள் எங்களைப் பரிகசிப்பீர்களானால், நிச்சயமாக நீங்கள் பரிகசிப்பது போலவே (அதிசீக்கிரத்தில்) நாங்கள் உங்களைப் பரிகசிப்போம்" என்று கூறினார்.

(11:38,39)

இப்பரிகசிப்போடு மாத்திரம் அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. அந்த நபியை மிரட்டி எச்சரிக்கைகூடச் செய்தனர்.

"நூஹே! (உமது பிரச்சாரத்தைவிட்டும்) நீர் விலகிக் கொள்ளாவிடில்(கல்லால்) எறியப்படுபவர்களில் (ஒருவராக) நிச்சயமாக நீரும் ஆகிவிடுவீர்" (26:116)

இங்கே இந்நபியைக் கல்லால் அடித்துக் கொன்று விடுவோம் என்று எச்சரிக்கை செய்யும் அதேவேளை உன்னை மட்டுமல்ல இன்னும் பலரை நாம் இப்படிக் கொன்றிருக்கிறோம் என தமது பெருமையைப் பறைசாற்றியும் கொள்கின்றனர். எனினும் அவர்களது பலமோ, பயமுறுத்தலோ நூஹ்(அலை) அவர்களின் பிரச்சாரப்பணியில் எந்தப்பாதிப்பையும் ஏற்படுத்திட வில்லை. அவருக்கும் அவர் சமூகத்து வம்பர்களுக்கு மிடையில் அல்லாஹ் வேறுபாட்டை ஏற்படுத்தி அவர்கள் அழியும்வரை தன் பணியில் உறுதியாகவே நூஹ்(அலை) அவர்கள் இருந்தார்கள்.

நபி இப்றாகிம்(அலை) அவர்கள் தமது அழைப்புப் பணியில் எதிர்கொண்ட சோதனைகளைச் சற்று எண்ணிப் பாருங்கள்.

அவரை அவர் சமூகம் மறுத்தது மட்டுமன்றி மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்து பகிரங்கப்படுத்தவும் செய்தனர். "மக்கள் சாட்சி சொல்லும் பொருட்டு அவரை மக்கள் முன் கொண்டு வாருங்கள்" என்றும் கூறினர் (21:61) அது மட்டுமின்றி மிகப் பெரும் நெருப்பை மூட்டி அவரை அதில் எறிந்தனர்.

"இவரை நெருப்பிலிட்டு எரியுங்கள். (அதன்மூலம்) உங்கள் தெய்வங்களுக்கு உதவிசெய்யுங்கள்" என அவர்கள் கூறினர். (21:68)

என்ற வசனத்தின் மூலம் அவர் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் போடப்பட்டதை அறியமுடிகின்றது. எனினும் அல்லாஹ் "நெருப்பே இப்றாஹீமுக்கு குளிர்ச்சியாகவும், சுகமளிக்கக் கூடியதாகவும் ஆகிவிடு" (21:69) என நெருப்புக்குக் கட்டளையிட்டான். அல்லாஹ்வின் கட்டளைப்பிரகாரம் நெருப்பு அவரை எதுவும் செய்யவில்லை. அவர் அதிலிருந்து பாதுகாக்கப்பட்டார்.

சத்தியப்போராட்டத்தில் நபி இப்றாஹீம்(அலை) சோதனைகளைச் சந்தித்தாலும் இறுதிவெற்றி அவருடையதாகவே இருந்தது.

"அவர்கள் அவருக்கு சதி செய்ய நாடினார்கள்; நாம் அவர்களையே நஷ்டமடைந்தவர்களாகச் செய்து விட்டோம்" (21:70) என்ற மறைவசனம் இப்றாஹீம் நபியுடைய எதிரிகளின் தோல்வியை பகிரங்கப் படுத்துகின்றது.

சத்தியப் போராட்டத்தில் இறங்கிய மூஸா(அலை) அவர்களை பிர்அவ்ன் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கினான்.

"என்னை விட்டு விடுங்கள்; மூஸாவை நான் கொல்லப்போகிறேன்; அவர் (முடியுமானால் தன்னைத் தற்காத்துக்கொள்ள) அவரது இரட்சகனை அழைக்கட்டும்; அவர் உங்களது மார்க்கத்தை மாற்றி விடுவார் அல்லது

பூமியில் குழப்பத்தை உண்டுபண்ணுவார் என்று நிச்சயமாக நான் பயப்படுகின்றேன்" (40:26) என்று போனவனது இறுதி முடிவு என்ன என்பதை நாம் அறிவோம்.

"பிர்அவ்னைச் சேர்ந்தோரை தீய வேதனை சூழ்ந்து கொண்டது". (40:45)

ஆட்சி அதிகாரத்தோடிருந்த பிர்அவ்ன் நபி மூஸா(அலை) அவர்களின் சத்தியப் போராட்டத்தின் முன் மண்ணைக் கவ்வினான்.

இறைத்தூதர் ஈஸா(அலை) அவர்கள் தன் பிரச்சார வாழ்வில் கண்ட இன்னல்கள்தான் எத்தனை! யூதர்கள் அவரை விபச்சாரத்தில் பிறந்தவன் என்றுகூடக்கூறினர். யூதர்களின் அபிப்பிராயப்படி அவரை அவர்கள் சிலுவையில் அறைந்து கேவலமாகக் கொன்று விட்டனர் என்கின்றனர். எனினும் அல்லாஹ் அவர்களை யூதர்களின் சதியிலிருந்து பாதுகாத்தான்.

".......அவரை அவர்கள் கொல்லவுமில்லை; அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை; எனினும் அவர்களுக்கு (ஈஸாவின் தோற்றத்தைப் பெற்ற) ஒருவனை ஒப்பா(க்கி காண்பிக்)கப்பட்டது. இன்னும் நிச்சயமாக இ(வ் விஷயத்)தில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களே அத்தகையோர் அதுபற்றி

சந்தேகத்திலேயே உள்ளனர். வெறும் யூகத்தைப் பின்பற்றுவதைத்தவிர, அதில் அவர்களுக்கு உண்மையான அறிவு (ஆதாரம்) கிடையாது. மேலும் உறுதியாக அவர்கள் அவரை கொலை செய்யவே இல்லை."

மேலும் அல்லாஹ் அவரைத்தன் அளவில் உயர்த்திக் கொண்டான். இன்னும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாக, தீர்க்கமான அறிவுடையவனாக இருக்கின்றான். (4:157,158)

யூதர்களின் சூழ்ச்சியிலிருந்து ஈஸா(அலை) பாதுகாக்கப்பட்டதுடன் யூதர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டதையும் இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறே இஸ்லாமிய பிரச்சாரக்களத்தில் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் கடுமையான வார்த்தை வதைகளுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள்.

"(நபியை நோக்கி) உபதேசம் அருளப்பட்டவரே! நிச்சயமாக நீர் பைத்தியக்காரர்தான்" என அவர்கள் கூறுகின்றனர். (15:6)

"நாங்கள் பைத்தியக்காரரான ஒரு கவிஞருக்காக எங்களுடைய வணக்கத்துக்குரியவர்(களான

தெய்வங்)களை விட்டு விடுவோமா என்று அவர்கள் கூறினர். (37:36)

இப்படி வார்த்தை அம்புகளால் வதைத்தவர்கள் அவரை ஊரைவிட்டுத் துரத்தவும், கொலை செய்திடவும் திட்டம் தீட்டினர்.

"(நபியே!) நிராகரித்துக்கொண்டிருப்போர் உம்மை சிறைப்படுத்தவோ, கொலை செய்யவோ (ஊரைவிட்டு) வெளியேற்றி விடவோ, உமக்கு விரோதமாக சூழ்ச்சி செய்து கொண்டிருந்த (நேரத்)தை (நினைத்துப் பார்ப்பீராக!) அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டி ருந்தனர். (அவர்களுக்கெதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். இன்னும் சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ் மிக்க மேலானவன். (8:30)

நபி(ஸல்) அவர்கள் காபிர்களின் இன்னல்களைக் கண்டு பின்வாங்காது பிரச்சாரத்தை முடுக்கிவிட்டார்கள். ஈற்றில் அவர்களது சூழ்ச்சிகளையெல்லாம் தவிடு பொடியாக்கி விட்டு அண்ணலாருக்கு அல்லாஹ் வெற்றியைக் கொடுத்தான்.

எனவே, அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமான இறைத்தூதர்களே பிரச்சாரக்களத்தில் இன்னல்களைச் சந்தித்திருப்பதால் ஒரு அழைப்பாளன் தன் பணியில் இடர்களைக் காண்பது என்பது தவிர்க்கமுடியாததாகும்

என்பதை உணர முடிகின்றது. இக்கட்டத்தில் பொறுமையுடன் உறுதியாக இருப்பது அழைப்பாளனின் கடமையாகும்.

"நிச்சயமாக நாம்தான் உம்மீது இந்தக்குர்ஆனைச் சிறுகச் சிறுக இறக்கி வைத்தோம்" (76:23) என அல்லாஹுத்தஆலா தன் திருமறையில் கூறுகின்றான். இங்கு நாம் அவதானிக்கவேண்டியது யாதெனில் குர்ஆன் அருளப்படுதல் என்பது மிகப் பெரும் அருளாகும். எனவே, இந்த வசனத்திற்கு அடுத்த வசனம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள் என்று ஆரம்பிக்கும் என்பதே சாதாரண மனித அறிவின் எதிர்பார்ப்பாகும். ஆயினும் அடுத்த வசனம்,

"ஆகவே, உம்முடைய இறைவனின் கட்டளைக்காகப் பொறுமையுடன் இருப்பீராக"(76:24) என்று அமைந்துள்ளது. இது குர்ஆனைப் பிரச்சாரம் செய்வோரை பொறுமையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது. அதாவது, சோதனைகள் வந்தடையும் என்பதையே உணர்த்துகின்றது.

அழைப்பாளன் தன் இலட்சியப் பயணத்தின் இலக்கை நோக்கிப் பொறுமையுடன் தொய்வின்றி தொடராகப் பயணித்துக்கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ் அவனுக்கு இதில் வெற்றியைக் கொடுக்கும் வரை அவன்

ஓய்ந்திருக்கலாகாது. இவ்வாறு நாம் கூறுவது அழைப்பாளன் தன் ஆயுள் காலத்திற்குள்ளேயே வெற்றி பெற்றேயாகவேண்டும் என்ற அர்த்தத்திலல்ல. தனி மனித செல்வாக்கு இஸ்லாமிய பிரச்சாரத்தின் இலக்கு அல்ல. அழைப்பாளன் மரணித்து விட்ட பின்னரும் அவனது அழைப்பின் உயிரோட்டம் சமூகத்தில் நீடித்து நிலைக்குமெனின் அவன் மரணித்தவன் அல்ல என்பதே உண்மையாகும்.

"மரணம் அடைந்த ஒருவனை நாம் உயிர்ப்பித்து எழுப்பினோம். இன்னும் அவனுக்கு ஓர் ஒளியையும் கொடுத்தோம். அதைக் கொண்டு அவன் மனிதர்களிடையே நடமாடுகின்றான். மற்றொருவன் இருள்களில் சிக்கிக்கிடக்கிறான். அதைவிட்டு அவன் வெளியேறவே முடியாது. இவ்விருவரும் சமமாவாரா?........(6:122) மேற்படி வசனம் மரணித்தும் உயிர்வாழ்வோர், வாழ்ந்தும் மக்கள் மனங்களைப் பொறுத்தவரை மரணித்தவர்களைவிடச் சிறந்தவர்கள் என்பதை உணர்த்துகின்றது.

யதார்த்தத்தில் அழைப்பாளனின் ஆயுள் என்பது அவனது உடலில் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதை மட்டும் குறிக்காது. மாறாக மக்கள் மனதில் அவனது போதனைகள் மங்காது மறையாது இடம் பிடித்திருக்கும் காலமெல்லாம் அவனுக்கு மரணம் என்பதே இல்லை.

பின்வரும் சம்பவம் அழைப்பாளனின் வெற்றி என்பது

அவனது ஆயுள்காலத்துக்குள் இடம்பெறுபவை மட்டுமல்ல. அவனது அழைப்பின் தாக்கத்தால் வரலாறு நெடுகிலும் பெறப்படும் வெற்றிகள் அனைத்தும் அதற்கு அடிப்படைக்காரணமாக இருந்த அழைப்பாளனின் வெற்றியே என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

நபி(ஸல்) அவர்களின் வருகை பற்றி அறிந்த ரோமாபுரி மன்னர் ஹெர்குலிஸ் அபூசுப்யானை அழைத்து நபியின் தனிப்பட்ட குணங்கள், குடும்பம், அவரது யோசனைகள், அவரை ஏற்றுக்கொண்டோரது நிலை என்பன பற்றியெல்லாம் விசாரித்துவிட்டு,

“நீ கூறுவது உண்மையென்றால் அவர் எனது கால்களுக்குக்கீழுள்ள பூமியையும் (வெற்றிகொண்டு) ஆளுவார்” என்றான்.

உண்மையில் மிகப் பெரும் ஒரு மன்னன் வெகுதூரத்திலுள்ள சாதாரண ஒரு மனிதர் தனது நாட்டை வெற்றி கொள்வார் எனக்கூறியது ஆச்சரியமானதே!.

இதைக்கேட்ட அபூசுப்யான்கூட “ரோமாபுரியின் மாமன்னன் அஞ்சக்கூடிய அளவுக்கு முஹம்மதின் விடயம் பெரிதாகிவிட்டது” எனக் கூறினார்.

ஹெர்குலிஸ் கூறியது போல் அவனது நாட்டை நபியவர்கள் கைப்பற்றினார்கள். ஆனால் அவர்கள்

நேரடியாக அல்ல தனது பிரச்சாரத்தின் மூலமே அதைச் சாதித்தார்கள். நபியின் அழைப்பு இந்நாட்டிற்கும் சென்று அங்கிருந்த சிலைகளைத் தகர்த்தது; சிலை வணக்கத்தை ஒழித்தது; நபியின் பிரச்சாரத்தால் வார்க்கப்பட்ட, நபியின் ஷரீஅத் சட்டங்களால் புடம் போடப்பட்ட கலீபாக்களால் அந்நாடு கைப்பற்றப்பட்டது. அவை கைப்பற்றப்படும் போது நபி(ஸல்) அவர்கள் மரணித்திருந்தார்கள். எனவே அழைப்பாளனின் வெற்றி என்பது அவன் உயிருடன் இருக்கும் போது கிடைப்பது மாத்திரமல்ல என்பதை உணர முடிகின்றது.

"மூஸா தன் சமூகத்தாரிடம் "நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்; இன்னும், பொறுமையாகவும் இருங்கள். சகித்திருங்கள்; நிச்சயமாக இந்த பூமி அல்லாஹ்வுக்கே உரியது; இதனை அவன் தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு (உரிமைப்படுத்தி) அனந்தரமாக்கி விடுவான்; (நல்ல) முடிவு அல்லாஹ்வுக்குப் பயப்படுகின்றவர்களுக்கே" என்று கூறினார்கள்.

(7:128)

"......நிச்சயமாக எவர் பயபக்தியுடன் இருந்து (கஷ்டங்களையும் சகித்துப்) பொறுத்துக் கொள்கின்றாரோ (அத்தகைய) நன்மை செய்தோரின் கூலியை நிச்சயமாக அல்லாஹ் வீணாக்கிவிடமாட்டான்......" (12:90)

மேலே நாம் குறிப்பிட்ட வசனங்கள் இறுதி வெற்றி

த.்.வாவும், பொறுமையுடையோருக்கே எனக்கூறுகின்றன. எனவே, ஒரு அழைப்பாளன் நிச்சயம் தோல்வியுறு வதில்லை. அவன், இறுதி வெற்றி நிச்சயம் தனக்குண்டு என்ற உறுதியுடன் தொல்லைகள், சோதனைகளைச் சகித்துக் கொண்டு சலிக்காது சத்தியப்பயணத்தைத் தொடரவேண்டும்.

**03. ஹிக்ம்மத் எனும் அணிகலன்:**

அல்லாஹ்வின் பாதையில் மனிதர்களை ஹிக்மத்தாக அழைக்க வேண்டும். த.்.வாவில் ஹிக்மத் இல்லாத வர்களுக்கு ஹிக்மத்தைவிடக் கசப்பான ஒன்றுமில்லை.

ஹிக்மத், அழகிய உபதேசம், நல்லோருடன் நல்லமுறையிலான விவாதங்கள், அக்கிரமக்காரர்களுடன் விட்டுக்கொடுக்காத விவாதமுறை என்ற நான்கு படித்தரங்களினூடாக மக்களை சத்தியப் பாதைக்கு அழைக்கவேண்டும். இதனைப் பின்வரும் வசனங்கள் தெளிவு படுத்துகின்றன.

"(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) ஹிக்மத்துடனும், அழகிய உபதேசத்தைக்கொண்டும், நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!....." (16:125)

"இன்னும், நீங்கள் வேதத்தையுடையவர்களுடன் அவர்களில் அக்கிரமமாய் நடப்பவர்களைத் தவிர்த்து, (மற்றவர்களுடன்) அழகிய முறையிலேயன்றி தர்க்கம் செய்யாதீர்கள்." (29:46)

## ஹிக்மத் என்பது :

ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைப்பதைக் குறிக்கும். ஒரு அழைப்பாளன் தான் அழைக்கும் மக்கள் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டதுபோல் ஒரு மாலைப் பொழுதிற்குள்ளேயே தமது நிலையை முற்று முழுதாகவே மாற்றி மாநபியின் தோழர்கள்போல் ஆகிவிடவேண்டும் என எதிர்பார்ப்பது ஹிக்மத்தாகாது.

அல்லாஹ்வுடைய ஹிக்மத் இந்த எதிர்பார்ப்பை எதிர்க்கின்றது. அல்குர்ஆன் நபி(ஸல்) அவர்களுக்கு மக்கள்மனதில் பதியும் வண்ணம் சிறுகச்சிறுக அருளப்பட்டமை இதனைத் தெளிவாக உணர்த்துகின்றது.

ஹிஜ்ரத்திற்கு சற்று முன்னர்தான் மி.ஃ.ராஜில் தொழுகை கடமையாக்கப்பட்டது. எடுத்த எடுப்பிலேயே இஸ்லாமிய பிரச்சாரத்தின் ஆரம்ப கட்டத்திலேயே அது விதிக்கப்படவில்லை. அதுவும் ஆரம்பத்தில் லுஹர், அஸர், இஷா ஆகிய நான்கு ரக்அத்துத் தொழுகைகள் இரண்டிரண்டு ரக்அத்துகளுடையனவாகவே விதிக்கப்பட்டன. பின்னர் தான் இவை நான்கு ரக்அத்துக்களாக அதிகரிக்கப்பட்டன.

ஸகாத் ஹிஜ்ரத்தின் இரண்டாம் ஆண்டுதான் விதிக்கப்பட்டது அல்லது மக்காவில் விதிக்கப்பட்டது எனினும் அதனை உரிய முறையில் நிறைவேற்றத்தக்க

தருணம் அப்போது அமையவில்லை எனலாம்.

ஸகாத்தைப்பெற ஸகாத் பணியில் ஈடுபடுபவர்களை (உம்மால்) ஹிஜ்ரி ஒன்பதில்தான் நபி(ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். ஸகாத் மூன்று படிமுறை வளர்ச்சிகளைக் கொண்டதாக, கடமையாக்கப்பட்டதாக நாம் கொள்ள முடியும்.

1. அறுவடைத்தினத்தில் அதற்குரியதைக் கொடுத்து விடுங்கள். இங்கே இது கடமை என்றோ, எவ்வளவு, எப்படி வழங்கப்பட வேண்டும் என்பதோ விபரிக்கப் படவில்லை.
2. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ஸகாத் கொடுக்கப்பட வேண்டிய பொருளின் அளவு விபரிக்கப்பட்டது.
3. ஹிஜ்ரி ஒன்பதில் விளைச்சல், கால்நடை வளர்ப்பு என்பவற்றுக்கு உரிய ஸகாத்தைப்பெற நபி(ஸல்) அவர்கள் உம்மால்களை அனுப்பினார்கள்.

சட்டமியற்றுவதில் சிறந்தவனான அல்லாஹ் எவ்வாறு தன்சட்டங்களை மக்களுக்கு விதித்துள்ளான் என்பதை சற்று எண்ணிப்பார்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

நோன்பை அல்லாஹ்விதியாக்கிய விதத்தைச் சற்று அவதானித்துப் பாருங்கள். ஆரம்பத்தில் நோன்பு பிடிப்பதா அல்லது அதற்குப் பகரமாக உணவளிப்பதா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மக்களுக்கு வழங்கப்பட்டது.

பின்னர் நோன்பு பிடித்தேயாகவேண்டும் என்று விதிக்கப்பட்டது. பின்னர் ஏற்கனவே இருந்த நோன்புக்குப் பகரமாக உணவளித்தல் என்ற சட்டத்தை நோன்பு நோற்க சக்தியற்றவர்களுக்கு உரியதாக்கப்பட்டது.

எனவே, மக்கள் உடனே மாறிவிட வேண்டும் என அழைப்பாளன் எதிர்பார்ப்பது ஹிக்மத்திற்கு எதிரானதாகும். நீங்கள் அணுகக்கூடியவர்களிடம் காணப்படும் நன்மைகளை ஏற்றுக்கொள்ளுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடம் காணப்படும் பாத்தில்களை களையமுயலுங்கள். மக்கள் அனைவரும் ஒரே தரத்திலுள்ளவர்களல்லர், அறியாமல் செயல்படுபவர்களுக்கும் வேண்டுமென்றே முரண்டு பிடிப்பவர்களுக்குமிடையில் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## நபியிடம் நல்ல முன்மாதிரி:

இங்கே அழைப்புப்பணியில் நபிகளார் காட்டிய சில முன்மாதிரிகளைக் கூறுவது மிகவும் பொருத்தமாக அமையும் என நினைக்கிறேன்.

1. நபி(ஸல்) அவர்கள் தன்தோழர்களுடன் மஸ்ஜிதில் அமர்ந்திருக்கையில் அ.்.ராபி ஒருவர் மஸ்ஜிதில் நுழைந்து அதன் ஒருபகுதியில் சிறுநீர் கழித்தார். நபித்தோழர்கள் அவரை விரட்டினர். எனினும் (அல்லாஹ் ஹிக்மத்தை வழங்கிய) நபி(ஸல்) அவர்கள்

நபித்தோழர்களைத் தடுத்தார்கள். அவர் சிறுநீர்கழித்து முடிந்ததும் அந்த இடத்திற்கு ஒருவாளித் தண்ணீரை ஊற்றுமாறு கூறினார்கள். பின்னர் அந்த அ.்.ராபியை அழைத்து, "மஸ்ஜித்களில் அசுத்தப்படுத்துவது ஆகாது. இது தொழுவதற்கும், அல்குர்ஆனை ஓதுவதற்குமுரிய (புனித) இடமாகும்", என்று அவரிடம் கூறினார்கள்.

நபிகளாரின் இந்த அழகியக அணுகுமுறை அந்த அ.்.ராபியை பெரிதும் ஆகர்ஷித்தது. எனவேதான் அந்த அ.்.ராபி "அல்லாஹ்வே! முஹம்மதிற்கு மட்டும் நீ அருள் புரிவாயாக! வேறு யாருக்கும் அருள்புரிந்துவிடாதே"! எனக்கூறியதாகச் சில அறிவிப்புக்களைக் காணமுடிகின்றது. நபி(ஸல்) அவர்கள் அந்த மனிதருடன் நல்லமுறையில் நடந்து கொண்டதாலேயே அவர் இப்படிக்கூறினார். எனினும் நபித்தோழர்களோ அந்த மனிதரின் அறியாமை நிலையை உணராது தீமையைத் தடுக்க இவ்விடத்தில் முற்பட்டனர்.

2. முஆவியதுப்னுல் ஹகம் என்ற நபித்தோழர் நபி(ஸல்) அவர்கள் மக்களுக்குத் தொழுகை நடத்திக் கொண்டிருக்கும் போது வந்து ஜமாஅத்துடன் இணைந்தார். அப்போது ஒரு மனிதர் தும்மி விட்டு அல்ஹம்துலில்லாஹ் என்றார். தொழுகையில் எந்தநிலையில் இருக்கும் போதும் தும்மல் வந்தால் அல்ஹம்துலில்லாஹ் கூறலாம்.- உடனே முஆவியா(ரழி) அவர்கள் அவருக்கு "யர்ஹமுக்கல்லாஹ்" என பதில்

கூறினார். மனிதரை நோக்கி இவ்வாறு பேசுவது தொழுகையை முறித்து விடும். எனவே மக்கள் அவரை ஒரு விதமாகப் பார்த்தனர். அவர், அவர்களை நோக்கி ஏன் என்னை எல்லோரும் இப்படிப்பார்க்கிறீர்கள் எனக் கோபத்தோடு கேட்டார். தொழுகை முடிந்ததும் நபியவர்கள் முஆவியாவை அழைத்து உரையாடினார். முஆவியா அவர்கள். இவரைப்போன்ற ஒரு அழகிய ஆசிரியனை நான் கண்டதேயில்லை. அவர் என்னை திட்டவுமில்லை, கடிந்து கொள்ளவுமில்லை. என்னைப்பார்த்து "இது ஒரு அல்லாஹ்வுக்குச் செய்யும் வணக்கமாகும். இதில் மனிதர்களுடன் பேசும் பேச்சுக்கள் இடம் பெறக்கூடாது. இதில் தஸ்பீஹ், தக்பீர் குர்ஆன் ஓதுதல் என்பனவே இடம்பெற வேண்டும் என்றார்கள்" எனக்கூறுகின்றார். மக்கள் மனதை வெகுஇலகுவில் கவரும் நோக்கத்துடன்கூடிய இஸ்லாமிய அழைப்புப்பணியின் அணுகுமுறையை நாம் இங்கே அவதானித்தல் வேண்டும்.

3. ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து " நான் அழிந்து விட்டேன்" என்றார். "உன்னை அழித்தது எது"? என அவரிடம் நபி(ஸல்) அவர்கள் கேட்டபோது. மனைவியுடன் ரமழான் நோன்பில் உறவு கொண்டுவிட்டதாகக் கூறினார்.

நபி(ஸல்) அவர்கள் அவரிடம் "ஒரு அடிமையை உரிமையிடு" என்றார்கள். அதற்குத் தன்னிடம் வசதி இல்லை என்றார் அவர். அப்படியாயின் "தொடராக

இரண்டு மாதங்கள் நோன்பிரு" என்றார்கள். அதற்குத் தனக்குச் சக்தியில்லையென்றார் அவர். அப்படியாயின் "அறுபது ஏழைகளுக்கு உணவளி" என்றார்கள். அதற்கும் தனக்கு வசதியில்லை எனக்கூறி நபியின் முன்னால் அவர் அமர்ந்திருந்தார்.

நபியவர்களிடம் கொஞ்சம் பேரித்தம் பழங்கள் கொண்டுவரப்பட்டது. அதனை அவரிடம் கொடுத்து இதனை தர்மம் செய்; என்றார்கள். நபி(ஸல்) அவர்களின் தயாள குணத்தைத் தெரிந்து கொண்ட அம்மனிதர் "எம்மைவிட எளியவர்களுக்கா இதைத் தர்மம் செய்யச் சொல்கிறீர்கள். மதீனாவின் இந்தக்கோடியில் இருந்து அந்தக்கோடி வரை சென்றாலும் எம்மைவிட வறியவர்களைக் காணமுடியாது", என்றார். நபியவர்கள் தனது கடைவாய்ப்பற்கள் தெரியுமளவிற்குச் சிரித்துவிட்டு "இதனை உன் குடும்பத்திற்கு உண்ணக்கொடு" என்றார்கள்.

நான் அழிந்து விட்டேன் என அச்சத்தோடு வந்தவர் பொருளோடு, இந்த மார்க்கம் தந்த சலுகையைப் பெற்ற மனநிறைவோடு சென்றார்.

நபித்தோழர் ஒருவருடைய கையில் தங்க மோதிரம் அணியப்பட்டிருப்பதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் அதைத் தனது கையாலேயே கழற்றி எறிந்து விட்டு

"உங்களில் ஒருவர் தனது கையில் நெருப்புத்

தணலை அணிந்து கொள்ள விரும்புவாரா? எனக் கேட்டார்கள்"

இங்கே நபி(ஸல்) அவர்கள் முன்னர் கூறியவர்களுடன் நடந்து கொண்ட முறையில் நடக்க வில்லை. தாமாக தனது கையாலேயே தங்க மோதிரத்தைக் கழற்றி எறிந்துவிட்டு நபி(ஸல்) அவர்கள் போய்விடுகிறார்கள். அந்த மனிதரிடம் "உனது மோதிரத்தை எடுத்துக்கொள். அதன் மூலம் நீ பயன் பெறலாம்; எனக் கூறப்பட்டபோது "அல்லாஹ்வின் மீது ஆணையாக நபியவர்கள் எறிந்த மோதிரத்தை நான் எடுக்கவே மாட்டேன் எனக் கூறினார். நபி(ஸல்) அவர்கள் தமது அணுகுமுறையூடாக எத்தகைய மாற்றத்தை நபித் தோழர்களிடம் ஏற்படுத்தி விட்டார்கள் என்பது இங்கே அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு அழைப்பாளன் மக்களை ஹிக்மத்தாக அழைப்பது அவசியமாகும். அறியாமையில் மூழ்கியுள்ளோரும் அறிவு படைத்தோரும் சமமாக மாட்டார்கள். ஏற்போருக்கும் வேண்டுமென்றே எதிர்ப்போருக்கும் வித்தியாசமுண்டு ஒவ்வொருவருக்கும் ஒரு நிலையுண்டு! அவரவர் நிலை அறிந்து அதற்கேற்றாற் போல் உரையாட வேண்டும்.

### 4. அழகிய நற்பண்புகள்

அழைப்பாளன் அழகிய குண நலன்களை யுடையவனாக இருக்க வேண்டும். அவனது கொள்கை, வணக்க வழிபாடு, தோற்றம் போன்ற அனைத்திலும்

அறிவின் அடையாளம் வெளிப்பட வேண்டும். இதற்கு மாற்றமாக பழக்க வழக்கங்களில் ஒழுக்க விழுமியமில்லா அழைப்புப்பணி தோல்வியே தரும் அல்லது அதன் பயன்பாடு ரொம்ப அருகியதாகவே இருக்கும்.

தான் மக்களுக்குப் போதிக்கும் இபாதத்துக்கள், முஆமலாத்துக்கள், நல்ல பழக்க வழக்கங்கள் என்பன அழைப்பாளனிடம் மிளிர வேண்டும் இல்லையெனில் அழைப்பாளனே முதலில் நரகுக்குச் செல்ல நேரிடும் துர்பாக்கியம் நிகழலாம்.

இஸ்லாமிய சகோதரர்களே! எமது நடைமுறை வாழ்வில் நாம் சில விடயங்களை மக்களுக்கு ஏவுகிறோம். ஆனால் அவற்றை நாம் நடைமுறைப்படுத்துவதில்லை. சந்தேகமேயின்றி இது மிகப் பெரும் குறையே!

சில வேளை நாம் போதித்ததை விட எமது நிலைக்கு மிக ஏற்றமானதொரு பணி இருப்பின் நாம் போதித்ததைச் செய்யாமல் விடுவது குற்றமாகாது. நாம் ஒரு விடயத்தைப் போதித்திருப்போம். சில வேளை அதை விட முக்கியமானதொரு பணி குறுக்கிடும் போது அதை செய்ய முடியாது போகலாம்.

நபி(ஸல்) அவர்கள் சில விடயங்கள் பால் மக்களை அழைப்பார்கள் எனினும் அவர்களை அதை விட முக்கிய பணிகள் மூழ்கடித்து விடுவதும் உண்டு. நோன்பு

நோற்காது இருக்கமாட்டார்களோ எனக் கருதும் அளவிற்கு சில காலங்களில் தொடராக நபிலான நோன்புகளை நோற்பார்கள். சிலவேலைகளில் அவர் நபிலான நோன்பு நோற்பதேயில்லை எனக் கருதும் அளவிற்கு நோன்பு நோற்காதும் இருப்பார்கள். அவர்களின் பணிகளுக்கேற்ப தனிப்பட்ட வணக்கங்களை அவர்கள் அமைத்துக் கொள்வதுண்டு.

சகோதரர்களே! ஒரு அழைப்பாளன் தாஈக்குரிய அனைத்து அழகிய நற்பண்புகளையும் அணிகலனாகக் கொண்டிருக்க வேண்டும். இது அவனது அழைப்பு மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பெரிதும் உதவும்.

### 05. தடையைத் தகர்த்தல்

ஒரு அழைப்பாளன் தனக்கும் மக்களுக்குமிடையில் நல்லதொரு நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களிலிருந்து தன்னைப் பிரிக்கும் தடைகளைத் தகர்த்திட வேண்டும்.

எமது அழைப்பாளர்களில் சிலர் ஏதேனும் ஒரு சமுகத்தில் ஒரு தீங்கைக் கண்டால் அந்தத் தீங்கின் மீதுள்ள வெறுப்பினால் அந்த மக்களை நெருங்குவதைத் தவிர்க்கின்றனர். அவர்களிடம் செல்வதையும், பிரச்சாரம் செய்வதையும் கூட தவிர்க்கின்றனர். நிச்சயம் இது அழைப்புப் பணியின் ஹிக்மத்தாக இருக்காது. அவர்களிடம் சென்று சத்தியத்தைக் கூறி அந்தத் தவறு

பற்றி எச்சரித்து அதைவிடுவதன் நலவு பற்றி நன்மாரயம் கூற வேண்டும்.

இந் நேரத்தில் இவர்கள் பாவிகள் அவர்களிடம் தான் எப்படிச்சொல்வது என்று ஒரு அழைப்பாளன் எண்ணக் கூடாது.

ஒரு அழைப்பாளன் அங்கு சென்று அவர்களை வழி நடாத்தாவிட்டால் அவர்களை யார் வழி நடத்துவது? அவர்களைப் போன்ற ஒரு பாவியின் கையில் அம்மக்களை ஒப்படைக்கலாமா? அல்லது ஒரு அறியாமைச் சமுகம் அவர்களை வழிநடத்த இடம் கொடுக்கலாமா? ஒரு போதும் முடியாது.

எனவே அழைப்பாளன் என்றவகையில் அவர்களிடம் பொறுமையுடன் சென்று த.்.வத் செய்யவேண்டும். மக்களுக்கும் தனக்குமிடையில் அழைப்பாளன் தொடர்பை வைத்திருக்க வேண்டும் அப்போதுதான் த.்.வத் யாருக்குத் தேவையோ அவர்களைச் சென்றடைய வழி பிறக்கும்.

நபி(ஸல்) அவர்கள் தனது பிரச்சாரத்தின் ஆரம்ப கட்டத்தில் ஹஜ்ஜுடைய காலங்களில் மினாவுக்குச் சென்று அங்குள்ள முஷ்ரிக்குகளுக்குச் சத்தியத்தை எத்திவைத்திருப்பதைக் காணலாம்.

இந்த பிரச்சாரத்திற்குத் தடை வந்த போது "என்

இரட்சகனது வார்த்தைகளை மக்களுக்குப் போதிப்பதை குறைஷிகள் தடுக்கின்றனர். நான் மக்களுக்குப் பாதிப்பதற்காக என்னை எவரும் (மக்களிடம்) அழைத்துச் செல்ல மாட்டார்களா?" எனக் கூறியிருப்பது மக்களிடம் நெருங்கிய உறவை ஏற்படுத்தி அவர்களுக்கு மார்க்கத்தைப் போதிப்பதன் அவசியத்தை உணர்த்துகின்றது. நபி(ஸல்) அவர்கள் எதிரிகள், தீயவர்கள் போன்றவர்களிடமும் சென்று த.்.வத் செய்ததைப் போன்று அழைப்பாளனும் பணிபுரிதல் வேண்டும்.

**06. எதிர்ப்போரையும் அரவணைத்தல்**

தன் கருத்துக்கு உடன்படாதோரை எதிரியாக எண்ணக்கூடாது! அவன் முரண்டு பிடிப்பதாகவும் எண்ணக்கூடாது. அவரது கருத்துக்கும் அவரிடம் ஆதாரம் இருக்கலாம். அதன் காரணத்தினால் தான் அவர் அக்கருத்தில் இருக்கிறார் என்று நல்லெண்ணம் கொள்ள வேண்டும்.

(பிக்ஹ்) கருத்து வேறுபாடுள்ள விடயங்களில் நெகிழ்ந்து கொடுக்கும் விதத்திலும் அவற்றை குரோதத்தையும், விரோதத்தையும் கிளரி விடும் அம்சமாகக் கொள்ளாமலும் இருத்தல் அவசியமாகும்.

சத்தியம் தெளிவானதன் பின்னரும் தனது கருத்தில் பிடிவாதமாக இருப்பவர்களுடன் அதற்கேற்றாற் போல்

நடந்து கொள்வதில் குற்றமில்லை. அவரை விட்டும் விலகி நடப்பதும் அவர் பற்றி மக்களுக்கு எச்சரிக்கை செய்வதும் அப்போது அவசியமாகின்றது.

அகீதாவுடன் சம்பத்தப்படாத இறை நிராகரிப்புக்கு இட்டுச் செல்லாத கிளைப்பிரச்சினைகள் உள்ளன. உண்மையில் அவற்றில் அல்லாஹ் எம்மை இறுக்கிப் பிடிக்கவில்லை. அவற்றில் கருத்துவேறுபாடுகள் தோன்ற வாய்ப்பும் உள்ளது.

நபி(ஸல்) அவர்கள் “ஒரு ஆய்வாளன் முயற்சி செய்து தீர்ப்புக்கூறி அது சரியாக அமைந்து விட்டால் அவனுக்கு இரண்டு கூலிகள் வழங்கப்படும். அதில் அவன் தவறிவிட்டால் அவனுக்கு ஒரு கூலி வழங்கப்படும்” எனக் கூறினார்கள்.

இந்த நபிமொழிப் பிரகாரம் ஒரு முஜ்தஹித் எப்போதும் நற்கூலியைப் பெற்றவராகவே இருப்பார். சரியான தீர்ப்பை வழங்கினால் இரண்டு கூலி கிடைக்கிறது. ஆய்வு செய்து முடிவில் தவறு விட்டு விட்டால் ஒரு கூலி கிடைக்கிறது. இந்த நபிமொழி கிளைப்பிரச்சினைகளில் மாறுபட்ட கருத்துக்கள் வர வாய்ப்புள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. இது போன்ற விடயங்களில் தன் கருத்தில் பிடிவாதம் கொள்ளல் கூடாது.

நீங்கள் எப்படி மற்றவர்கள் உங்களுக்கு

முரண்படுவதை விரும்புவதில்லையோ அவ்வாறே உங்களுக்கு மாறுபட்ட அவர்களுக்கும் நீங்கள் அவர்களுக்கு முரண்பட விரும்ப மாட்டார். நீங்கள் எப்படி உங்கள் கருத்துக்களைப் பிறர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களோ அவ்வாறே பிறரும் எதிர்பார்ப்பர். எனவே உங்கள் கருத்துக்கள் பக்கம் மக்கள் அனைவரும் தங்கள் கருத்துக்களை விட்டு விட்டு வந்து விட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அர்த்தமற்றதாகும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் அனைவரும் தனது கருத்துக்களில் பிடிவாதமாக இருப்பதை விட்டு குர்ஆன், சுன்னாவின் பக்கம் மீள வேண்டும்.

“இன்னும் (அவர்களிடம் நீர் கூறுவீராக) நீங்கள் எவ்விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருக் கிறீர்களோ அதன் தீர்ப்பு அல்லாஹ்வின் பக்கமே இருக்கின்றது.” (42:10)

ஏதேனும் ஒரு விஷயத்தில் நீங்கள் பிணங்கிக் கொண்டால் அதனை அல்லாஹ்விடமும், (அவனுடைய) தூதரிடமும் திருப்பி (ஒப்படைத்து) விடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஏற்றுக் கொள்ளுங்கள்) மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நபியையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் இதுதான் நன்மையாகவும், மிக அழகான முடிவாகவும் இருக்கும். (4:59)

இவ்வாறு கருத்து வேறுபாடுகளைக் களைய அல்குர்ஆனினதும் அஸ்ஸுன்னாவினதும் தீர்ப்பை நாடிச் சென்றவர்கள் யாருடைய கருத்துக்காகவும் அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் கட்டளைக்கு முரண்படலாகாது! உண்மை எது என்பது தெளிவானதன் பின் அதற்கு முரண்படும் எவரது கூற்றையும் ஏற்றலாகாது. அக்கருத்து அறிவிலும் மார்க்க நிலையிலும் உயர்ந்தவர்களால் கூறப்பட்டிருப்பினும் அவற்றை நாம் தூக்கிப்பிடிக்க வேண்டியதில்லை. ஏனெனில் மனிதர்களின் கூற்றில் குறையிருக்கலாம். அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கூற்றில் குறை இருக்கமாட்டாது.

இந்த இடத்தில் ஒரு வேதனையான விடயத்தை வெளியிட விரும்புகின்றேன். சத்தியத்தைத் தேடி அதனைப்பின்பற்ற விரும்புபவர்கள் தமக்கென தனிப்பட்ட பெயர்களைச் சூட்டி அல்லது தம்மைத் தனியாக இனம் காட்டி பிளவுபட்டு செயல் படுவது எனக்கு வேதனையைத் தருகின்றது. யதார்த்தத்தில் இது தவறாகும். அல்லாஹ்வின் மார்க்கம் ஒன்றே! இஸ்லாமிய உம்மத்தும் ஒன்றே. இதனை அல்லாஹுத்தஆலா "நிச்சயமாக இது (இஸ்லாமிய மார்க்கம்) ஒரே மார்க்கமான உங்களுடைய மார்க்கமாகும். நான் (தான்) உங்களுடைய ரப்பு. எனவே, என்னையே நீங்கள் அஞ்சுங்கள்" என்று கூறிக் காட்டுகிறான். (23:32)

மேலும் அல்லாஹுதஆலா தனது நபியைப் பார்த்து "நிச்சயமாக தங்கள் மார்க்கத்தைப் (பலவாறு) பிரித்து, பல பிரிவினர்களாகி விட்டனரோ, அவர்களின் எந்தக் கருமத்திலும் நீர் இல்லை அவர்களுடைய காரியம் அல்லாஹ்வின் பால் உள்ளதாகும். பின்னர் அவர்கள் செய்து கொண்டிருந்த வற்றை (மறுமையில்) அவர்களுக்கு அவன் அறிவிப்பான்" என்று சொல்லிக் காட்டுகிறான். (6:160)

இவ்வாறே "(விசுவாசிகளே) மார்க்கத்தில் நூஹ்வுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கு அவன் மார்க்கமாக்கி இருக்கிறான். ஆகவே, (நபியே!) நாம் உமக்கு வஹி மூலம் அறிவித்ததும் இப்றாஹீம், மூஸா, ஈஸா, ஆகியோருக்கு நாம் உப தேசித்தும் (என்னவென்றால்) நீங்கள் மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள் நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள் (என்பதேயாகும்)" (42:13)

இது அல்லாஹ்வின் அழைப்பாகும் இதற்கு நாம் பதிலளிப்பது கட்டாயக் கடமையாகும். எனவே நாம் திறந்த மனதுடன் நல்லிணக்கத்தை நாடி கருத்துக்களைப் பரிமாற வேண்டும்.

வீணானவிமர்சனமோ, பழி வாங்கும் எண்ணமோ இன்றி கருத்து வேறுபாட்டுக்குரிய விடயங்கள் பற்றி கலந்துரையாட வேண்டும். தனது கருத்தைப் பரப்பும் நோக்குடன் பிறரது அபிப்பிராயங்களை மட்டம் தட்டும் எண்ணத்தில் வீண் விமர்சனத்திற்காக விவாதிப்பது அல்லாஹ்வின் திருப்தியைத் தேடித்தராது.

நாமெல்லாம் ஒரே சமுகமாக ஒன்றாக இருக்க வேண்டும். அனைவரிடமும் தவறுகளும் நலவுகளும் இருக்கும். இருக்கும் குறைகளை அகற்றும் வழி மனம் திறந்த உரையாடலே! ஒருவர் இல்லாத நேரத்தில் அவரது குறைகளைக் கதைப்பதும் கேவலப் படுத்துவதும் தவறுகளைத் தவிர்க்கும் வழியாகாது.

தவறான கருத்தோட்டத்தில் உள்ளோருடன் உரையாட வேண்டும். அதன் பின்னும் அவர் தனது தவறிலையே பிடிவாதமாக இருப்பது தெளிவானால் அவர் விடயமான எமது கடமை நீங்கி விடுகின்றது இதன் பின்னர் நாம் இவரது தவறான கருத்தோட்டத்திலிருந்து மக்களைக் காப்பதற்காக அவரது தவறான கருத்துக்கள் பற்றி எடுத்துக் கூறலாம்.

இதுதான் சமுக சீர்திருத்தத்திற்கான சரியான வழியாக அமையும் உண்மையில் பிரிவும் பிளவும் முஸ்லிம்களினது எதிரிகளைத் தவிர வேறு யாரையும் திருப்திப்படுத்தாது.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவனுக்குக் கட்டுப்படுவதில் எமது இதயங்களை ஒன்றிணைத்து அல்லாஹ்விடமும் அவன் தூதரிடமும் தீர்வைப் பெறுபவர்களாக எம்மை ஆக்கி அருள்வானாக!

எமது எண்ணங்களைத் தூய்மைப்படுத்தி அவனது ஷிரீஅத்தில் எமக்கு மறைந்திருப்பவற்றைத் தெளிவுபடுத்துவானாக.

*வாஆகிரு த'.வானா அனில்ஹம்து லில்லாஹி ரப்பில்ஆலமீன்*

# படித்து வாருங்கள்

## உண்மை உதயம்
### இஸ்லாமிய விளக்க மாத இதழ்

அல்குர்ஆன் அல்ஹதீஸ் விளக்கவுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், முஸ்லிம் உலகின் அன்றாடப் பிரச்சினைகள், ஹதீஸ் மொழி பெயர்ப்பு, கேள்வி பதில், துணுக்குகள், இஸ்லாமிய போட்டி என பல்வேறு இஸ்லாமிய விளக்கங்களைத் தாங்கி வரும் உண்மை உதயத்தை தொடர்ந்து வாசித்து வாருங்கள். புதிய சகோதரர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள்! சந்தாதாரராகுங்கள்!! சந்தா சேருங்கள்!!!

## இஸ்மாயில் ஸலபியின் விற்பனையில் உள்ள ஏனைய நூற்கள்

| | |
|---|---|
| பொறாமை வேண்டாம் | : 15.00 |
| தற்பெருமை வேண்டாம் | : 8.00 |
| புறம் இஸ்லாத்தில் ஹராம் | : 25.00 |
| சகுனம் | : 10.00 |
| தாயத்து ஈமானிற்கு ஆபத்து | : 10.00 |
| முதல் நிலை முஸ்லிம் பெண்கள் | : 30.00 |
| பெண் இனத்தின் முன்மாதிரிகள் | : 25.00 |


*தொடர்புகளுக்கு :*

***எஸ். எச். எம். இஸ்மாயீல் ஸலபீ***

**JASM**

பறகஹதெனிய, வேஉட,

இலங்கை.

# زاد الداعية إلى الله

فضيلة الشيخ

**محمد بن صالح العثيمين**

- رحمه الله -

ترجمه إلى التاملية

الشيخ/ محمد إسماعيل بن شاه الحميد (السلفي)

تاميلي


المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بسلطانة

تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

هاتف: ٤٢٤٠٠٧٧ ناسوخ: ٤٢٥١٠٠٥ ص ب ٩٢٦٧٥ الرياض ١١٦٦٣ بريد إلكتروني E.mail : Sultanah22@hotmail.com

THE COOPERATIVE OFFICE FOR CALL & FOREIGNERS GUIDANCE AT SULTANAH

Tel:4240077 Fax:4251005 P.O.Box:92675 Riyadh:11663 K.S.A. E-mail: sultanah22@hotmail.com